செய்திவெளியீடு எண்.7A/2017 நாள்: 07.02.2017

## மீஞ்சூர் சுத்திகரிப்பு நிலையத்தில் பராமரிப்பு பணிகள்

சென்னைக் குடிநீர் வாரியத்தின் மீஞ்சூரில் உள்ள நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் உற்பத்தி செய்யும் திறன்கொண்ட கடல் நீரை குடிநீராக்கும் நிலையத்திற்கு மின்சாரம் வழங்கும் மின்பாதையில் தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தினரால் 09.02.2017 அன்று பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதால் 09.02.2017 அன்று காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை இந்நிலையத்தில் கடல் நீர் சுத்திகரிப்பு பணிகள் நிறுத்தி வைக்கப்பட உள்ளன. இதனால், 09.02.2017 அன்று காலை 06.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை கீழ்க்கண்ட பகுதிகளில் வழங்கப்பட உள்ள குடிநீர் அளவு குறைவாக இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

1) மாதவரம்
2) மணலி
3) திருவொற்றியூர்
4) எர்ணாவூர்
5) கத்திவாக்கம்
6) பட்டேல் நகர்
7) வியாசர்பாடி

இதனால் பொது மக்கள் முன் எச்சரிக்கையாக வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்துப்படுகிறார்கள். மேலும், அவசர தேவைக்கு லாரிகள் மூலம் குடிநீர் பெற்றுக் கொள்ள கீழ்க்காணும் அலுவலர்களை தொடர்பு கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| பகுதிப் பொறியாளர்–1 | : | 8144930901 |
| பகுதிப் பொறியாளர்–2 | : | 8144930902 |
| பகுதிப் பொறியாளர்–3 | : | 8144930903 |
| பகுதிப் பொறியாளர்–4 | : | 8144930904 |
| தலைமை அலுவலகம் – புகார் பிரிவு | : | 044–28454040 மற்றும்<br>044–45674567 |

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர்